DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 325 /2023

Prosecution Witness 5

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலசுப்பிரமணியன் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.கருப்புசாமி | Calling | : தலைமைக்காவலர் |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of June 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை :

1. நான் தற்போது பொள்ளாச்சி நகர கிழக்கு காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.03.2023 அன்று பொள்ளாச்சி நகர கிழக்கு காவல்நிலையம் பொள்ளாச்சியில் அலுவலில் இருந்தபோது பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேஷனை பெற்று அங்கு சிகிக்சையில் இருந்த மாரியம்மாள்(வயது 55), க/பெ. மதுரைவீரன் என்பவரின் புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 97/2023, இதச பிரிவுகள் 294(b). 447. 324. 506(ii) மற்றும் 4 of THPWH Act -ன் கீழ் வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் பழனி அவர்களின் பார்வைக்கு வைத்துதகவல் கொடுததேன். (முதல் தகவல் அறிக்கை **அசாஆ** 3 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). உதவி ஆய்வாளர் என்னைவிசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

2. மருத்துவமனையில் இருந்து தகவல் எனக்கு எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் 30.03.2023 அன்று காலை 03.30 மணியளவில் தகவல் கிடைத்தது. நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் 4 மணிக்கு சென்றுவிட்டேன். காயம்பட்டவர் மருத்துமனையில் எந்த வார்டில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் என்றால் பெண்கள் சிகிச்சை பகுதியில்

அனுமதிக்கப்பட்டு இருந்தார். காயம்பட்ட நபருடம் யார் உடன் இருந்தார்கள் என்றால் அவரது மகள் ஆராத்தாள் என்பவர் உடன் இருந்தார்.

3. நான் மருத்துவமனைக்கு சென்றபோது காயம்பட்ட நபர் மயக்க நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல, அவர் நல்ல சுய நினைவுடன் இருந்தார். நான் அவரை விசாரணை செய்தபோது காயம்பட்ட நபர் தன்னுடைய வீட்டில் இருந்தபோது சத்தமாக பேசியதால் பக்கத்து வீட்டில் இருந்த எதிரி ஆபாசமாக பேசி, அதன் பின்னர் வீட்டின் கேட்டை உதைத்துக்கொண்டு கதவை தட்டி திறக்கும்போது அரிவாளால் விசிவிட்டார் என்றும் அது காயம்பட்ட நபரின் இடது கை கட்டைவிரல் மற்றும் அவரது முதுகு மற்றும் இடது முழங்கையில் பட்டுவிட்டதாகவும் பெண் என்றும் பாராமல் எதிரி கொலை மிரட்டல் விடுத்துச் சென்றார் என்றும் அதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் என்னிடம் கூறினார்.

4. என்னிடம் புகாரை வாக்குமூலமாக கொடுக்கும்போது எதிரி அவருடைய வீட்டிற்கு இரண்டு முறை வந்ததாக சொன்னார். காம்பவுண்டின் கேட்டை உதைத்து உள்ளே வந்து சம்பவம் எங்கு நடந்ததாக கூறினார் என்றால் காம்பவுண்டிற்குள் நடந்ததாக கூறினார். நான் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முகாந்திரம் ஏதும் உள்ளதா என்றும் பாராமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.